முகமூடிக்குள் சிரிக்கும் கலை

----------------------------------------------------------------------

முகமூடிக்குள்
யார் புன்னகைக்கிறார்கள் யார் பல்லைக் கடிக்கிறார்கள்
என்பதே தெரிவதில்லை.
அதனால் கண்களால் சிரியுங்கள் ப்ளீஸ்.
கைகுலுக்குவதை நிறுத்தி விட்டதால்
கைகளை அன்பாக வருடுபவர்கள் யார்
பலம் கொண்டு நெறிப்பவர்கள் யார்
என்பதே தெரியாமல் போய் விடுகிறது.
தயவு செய்து கைகளைக் குவித்து
வணக்கம் தெரியுங்களேன்.
உங்கள் கைகளில் ஆயுதம் இல்லை என்பதையாவது
தெரிந்து கொள்கிறேனே.
மனிதனுக்கு மனிதன் இடைவெளி விட்டதில்
கிசுகிசு மொழியில் அந்தரங்கம் பேச முடிவதில்லை.
வாருங்கள் எஸ்கிமோக்களைப் போல்
நாம் குறியீடுகளால் பேசிக் கொள்வோம்.
- 18 டிசம்பர் 2020

